வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

ISO9001:2015, ISO 14001 : 2015,
OHSAS 18001:2007 & ISPS Compliant Port

SAGARMALA
PORT-LED PROSPERITY

Release No: 25 Date: 18.06.2020

## Crew change through V.O. Chidambaranar Port crosses 200 mark

Spearheading the efforts for crew change of Indian seafarers, V.O. Chidambaranar Port has successfully completed 202 crew changes on 15.06.2020.



Sign-on and Sign-off of Indian crew through VOC Port commenced on 29.04.2020 and so far, up to 15.06.2020, 88 crew have signed-on and 114 crew have signed off on 32 occasions. COVID-19 tests and Quarantine of crew were organized before Sign-on and Sign-off, as per the Standard Operating Procedures (SOPs).

Shipping is vital activity for maintenance of global supply chains, due to COVID-19 restrictions, large numbers of seafarers had to extend their service on board ships after many months at sea, unable to be replaced after completion of service period on board ships. seafarers need to be changed over to and from the ships which they operate to ensure compliance with International Maritime Regulations for ensuring safe ship operations, well-being of the crew and prevention of fatigue.

In order to facilitate and regulate crew change for seafarers, the Ministry of Home Affairs', Government of India, had issued Standard Operating Procedure (SOP) on 21.04.2020 for permitting the movement of persons to sign-on and sign-off at Indian Ports.

Based on the above, the DG (Shipping), Ministry of Shipping, had prescribed a detailed Standard Operating Procedure and protocol with regard to sign-on and sign-off to be followed for controlled crew change of Indian seafarers at Indian Ports and anchorages.

Shri T.K. Ramachandran, IAS, Chairman, V.O. Chidambaranar Port Trust, in his message stated that “The crew change activities are well coordinated and safely executed on adhering to the SOPs by officials of Port, District Administration, Customs, Immigration and PHO and so far, all the seafarers who signed-off and signed-on through VOC Port have tested negative”.

The above details were released in a Press Release by V. O. Chidambaranar Port Trust, today.

Public Relations Officer

ISO9001:2015, ISO 14001 : 2015,
OHSAS 18001:2007 & ISPS Compliant Port

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Shipping, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

பத்திரிக்கை செய்தி எண்: 25 நாள்:18.06.2020

**வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் இந்திய கப்பல் மாலுமிகள் பணிக்கு செல்லுதல் மற்றும் பணி முடிந்து தரை இறக்கம் செய்யும் நடைமுறை 200-ஐ கடந்தது**

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் சீரிய முயற்சியால் 15.06.2020 அன்று வரை, 202 இந்திய கப்பல் மாலுமிகள் பணிக்கு செல்லுதல் மற்றும் பணி முடிந்து தரை இறக்கம் செய்யப்பட்டனர்.



29.04.2020-ல் இருந்து வ.உ.சிதம்பரனார் துறைமுகம் மார்க்கமாக இந்திய கப்பல் மாலுமிகள் பணிக்கு செல்லுதல் மற்றும் பணி முடிந்து தரை இறக்கம் செய்யப்பட்டு வருகின்றனர். 15.06.2020 வரை 32 இவ்வகை நிகழ்வுகள் நடைபெற்றுள்ளது. அதில் 88 மாலுமிகள் பணிக்கு சென்றுள்ளனர் மற்றும் 114 மாலுமிகள் பணி முடிந்து தரை இறக்கம் செய்யப்பட்டு உள்ளனர். இந்திய அரசினால் பரிதுரைக்கப்பட்டுள்ள பிரத்தியோக செயலாக்க செயல்முறையின் படி அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மற்றும் தனிமைப்படுத்துதல் போன்ற செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கப்பல் போக்குவரத்து, உலகளாவிய விநியோக சங்கிலியினை நிலையான முறையில் பராமரித்து வருகிறது. தற்போது உலகளவில் நிலவி வரும் கொரோனா தொற்றினால் உலமெங்கும் விதிக்கப்பட்டுள்ள பல்வேறு கட்டுபாடுகளினால் பல மாதங்கள் மேற்கொண்ட கப்பலின் பணி முடிந்த பின்பு தாய் நாட்டிற்கு திரும்ப இயலாமல் மாலுமிகள் தவித்து வந்தார்கள். அதே நேரத்தில் அவர்களுக்கு பதிலாக பணியில் அமர்த்தபட இருந்த மாலுமிகளும் கப்பல் பணிக்கு செல்ல முடியாமல் தவித்து வந்தனர். இவ்வகையான கப்பல் மாலுமிகள் பணி காலம் முடிந்து தரையிறக்கம் செய்வதும் அவர்கள் இடத்தில் மாற்று கப்பல் மாலுமிகள் பணியில் அமர்த்துவதும் சர்வதேச கடற்சார் ஒழுங்குமுறையினை இணக்கம் செய்வதாகும். மேலும் மாலுமிகளின் நிலையான பணி மாற்றங்கள் மாலுமிகளின் சோர்வினை தவிர்க்கவும், அவர்களது நல்வாழ்விற்கும் அதற்மேலாக பாதுகாப்பான கப்பல் இயக்கத்திற்கு உகந்ததாக இருக்கும்.

இந்திய பெருந்துறைமுகங்களுக்கு சரக்குகளை ஏற்றி வரும் கப்பல்களில் பணிபுரியும் இந்திய மாலுமிகள் பணிக்கு செல்லுதல் மற்றும் பணி முடிந்து தரை இறக்கம் செய்வதற்கான பிரத்தியோக செயலாக்க செயல்முறையினை, உள்நாட்டு விவாகாரங்கள் அமைச்சகம் 21.04.2020 அன்று வெளியீட்டுள்ளது. இந்த பிரத்தியோக செயலாக்க செயல்முறையினை பின்பற்றி மத்திய கப்பல்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் இயக்குநர் ஜெனரல், கப்பல்துறை, இந்திய துறைமுகங்களில் மாலுமிகள் பணிக்கு செல்லுதல் மற்றும் பணி முடிந்து தரை இறக்கம் செய்வதற்கு விரிவான பிரத்தியோக செயலாக்க செயல்முறையினை வெளியிட்டுள்ளது.

திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழக தலைவர் அவர்கள் ''இந்திய கப்பல் மாலுமிகள் பணிக்கு செல்லுதல் மற்றும் பணி முடிந்து தரை இறக்கம் செய்யபட்ட நிகழ்வினை ஒருங்கிணைத்து, பாதுகாப்பான வழிமுறைகள் மற்றும் பிரத்தியோக செயலாக்க செயல்முறையினை பின்பற்றி சிறப்பாக செய்து வரும் துறைமுக அதிகாரிகள், சுங்கதுறை, குடியுரிமை துறை மற்றும் துறைமுக சுகாதார அமைப்பு அனைவரையும் பாராட்டினார்கள். மேலும் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தின் மூலம் இதுவரை கப்பலில் பணிக்கு சென்ற மாலுமிகள் மற்றும் பணி முடிந்து தரை இறங்கிய மாலுமிகள் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று கூறினார்''.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுகபொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி